முருகப்பெருமான் துணை

**மகான் தன்வந்திரி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.02.2024,** திங்கட்கிழமை

1. மன்னவனாக மாதருமவானாக
   மகத்துவம் மிக்க அவதாரத்தை
   நன்னயமாய் கொண்ட அரங்கனே
   ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சால் திங்கள்
   குறைவிலா முன்னான்கீர் திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 14 ம் நாள், 26.02.2024, திங்கட்கிழமை)
   தெரிவிப்பேன் தன்வந்திரி யானும்
   துல்லிய ஆசி உலகநலம் வேண்டி
3. வேண்டியே பிரணவக்குடில் நோக்கி
   வினவிட மக்கள் வந்துமே
   தொண்டாற்றி அரங்கமகானின்
   தொண்டர்களாக அடையாளம்
4. அடையாளம் கொண்டு சேவை
   அளவிலாச் செய்து வருக
   தடையின்றி உலகம் எங்கிலும்
   தன்னார்வத் தொண்டின் வழி
5. வழிதனில் சமூக மாற்றம்
   வணங்கும் படி உலகம் எங்கும்
   அழியாமை எனும் மகாசக்தி
   அரங்கன் மூலம் கிட்டிப்பரவி
6. பரவியே அனைத்து பேர்களும்
   பரோபகாரம் மிக்கவர்களாக
   தரணியை பாதுகாத்துமே
   தரும வழிகாட்டும் ஞானிகளாகவே
7. ஆகவே ஆற்றல் கூடி
   அரங்கன் அவதார மகிமை
   மிகைபட உலகம் அறியவே
   மாற்றம் சடுதி காண்கும்

8. காண்கவே கலியின் கட்டங்கள்
கண்டறியா வண்ணம் விலகியே
ஆன்மீக ஞான வழிப்பாதை
அரசியல் களம் கண்டுமே

9. கண்டுமே ஞானத் தலைமையாக
கந்தன் ஆசி தந்தருள
உண்டாகும் ஞான ஆட்சி
ஊழலற்ற உண்மை நிறைந்த

10. நிறைந்த ஞானிகள் ஆட்சியின்
நிலவுலகமாக மாறி இனிதே
வரலாறு படைக்க நேரும்
வள்ளல் அரங்கன் தானும்

11. தானதரும சைவநெறி கொண்டு
தன் தவபலமும் கொண்டு
ஞான ஆட்சி நிறுவ நேரும்
நாட்டிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—